பொள்ளாச்சி வணிகவரி மாவட்ட துணை ஆணையர்(வவ) அவர்களது

செயல்முறைகள்

பிறப்பிப்பவர் - செல்வி.ப.சுதா பி.இ.,

ந.க.எண் 245/2016/அ1 நாள் .05.2016

பொருள் : பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - கோவைக் கோட்டம் - பொள்ளாச்சி வணிகவரி மாவட்டம் - தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4-ல் அடங்கிய சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III பணியிடங்களுக்கான போட்டித் தேர்வு 2013-14, 2014-15 சுருக்கெழுத்து தட்டச்சர் நியமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறை - தகுதிகாண் பருவம் ஆணைகள் பிறப்பித்தல்.

பார்வை :
1) செயலர், தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம், சென்னை கடிதம் எண் 8850/PSD-B1/2015 நாள் 31.12.2015.
2) இணை ஆணையர்(வவ) கோவை, அவர்களின் கடிதம்.எண் அ2/9353/2015/, நாள் 29.01.2016.
3) துணை ஆணையர்(வவ), பொள்ளாச்சி அவர்களின் செயல்முறைகள் ஆணை எண் ந.க. 245/2016/அ1 , நாள் 11.03.2016
4) அரசாணை எண் 43 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை(எஸ்) நாள் 07.04.2009.

-----

**ஆணை**

தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் போட்டித் தேர்வு 2013 14மற்றும் 2014-15 மூலம் நேரடித் தேர்வின் மூலம் சுருக்கெழுத்து தட்டச்சராக நிலை III தேர்வு செய்யப்பட்டு, கோவைக் கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்காணும் பணியாளர் பார்வை 3-ல் காணும் துணை ஆணையர்(வவ) பொள்ளாச்சி அவர்களின் செயல்முறை ஆணையின்படி சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III பணி நியமனம் செய்யப்பட்டார். தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் 32 a) (i) -ன் கீழ் தனியாளர் அவர் பணியேற்ற நாள் முதல் பணி வரன் செய்யப்பட்டு தகுதிகாண் பருவம் தொடங்கப்பட்டதாக ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | தனியாளரின் பெயர், பதவி மற்றும் பணியேற்ற அலுவலகம் | பணியேற்ற நாள்/தகுதிகாண் பருவம் தொடங்கப்பட்ட நாள் |
|---|---|---|
| 1 | திருமதி.வே.கோமதி<br>சுருக்கொழுத்து தட்டச்சர் நிலை III<br>துணை ஆணையர்(வவ) அலுவலகம்,<br>பொள்ளாச்சி | 11.03.2016 முற்பகல் |

மேற்காண் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக 3 (மூன்று) ஆண்டுகளுக்குள் 2 (இரண்டு) ஆண்டுகள் திருப்திகரமாக தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யவேண்டும்.

தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வில தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் தமிழ்நாடு தொழில் நுட்ப கல்வி இயக்கத்தால் நடத்தப் பெறும் (Computer Office Automation) சான்றிதழ் படிப்பு தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

"மேற்படி ஆணை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் 2013-14 தொகுதி IVல் அடங்கிய சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை III) நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரை கிளைகளில் நிலுவையாக உள்ள நீதிப்பேராணை மற்றும் இதர வழக்குகளின் இறுதித் தீர்ப்புகளுக்கு உட்பட்டது"

ஒ/ப

துணை ஆணையர்(வவ)(கூ.மு.பொ)
பொள்ளாச்சி

பெறுநர்

திருமதி வே. கோமதி,
சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III
துணை ஆணையர்(வவ)அலுவலகம்
பொள்ளாச்சி

நகல்- இணை ஆணையர்(வவ), கோவை
அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது